



# சக்கர வியூகம்

SAKKRA VIYUGAM

புலனாய்வு நாளிதழ்

"தேமதுரத் தமிழோசை உலகமெலாம்"






Website: www.sakkraviyugam.com PRGI:TNTAM/25/A1018 Email: sakkraviyugam@gmail.com

VOLUME : 01 ISSUE: 272 26.03.2026 THURSDAY PANGUNI: 12 PRICE : RS.5/-

மலர் : 01 இதழ் : 272 26.03.2026 வியாழக்கிழமை பங்குனி : 12 விலை : ரூ.5/–


## சிலிண்டர் வழங்குவதும், வெளியுறவுக் கொள்கையும்

# "மாநில அரசின் கையிலா இருக்கிறது? !"

## முதல்வர் ஸ்டாலின் பேச்சு

சென்னை: மார்ச்.26-

மேற்காசிய போர் விளைவாக எரிவாயு தட்டுப்பாடு ஏற்பட்டு அது பொதுமக்களையும், தொழிலாளர்களையும் பாதிக்கும் நிலை உருவாகியுள்ள சூழலில், "சிலிண்டர் வழங்குவதும், வெளியுறவுக் கொள்கையும் மாநில அரசின் கையிலா இருக்கிறது?" என காட்டமாக வினவியுள்ளார் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின்.




இது தொடர்பாக முதல்வர் ஸ்டாலின் எக்ஸ் பக்கத்தில் பகிர்ந்த பதிவில் கூறியிருப்பதாவது: 'கோவிட் காலத்தைப் போல' என பிரதமர் பேசியதால், ஏற்கெனவே எரிவாயு தட்டுப்பாட்டால் தவிக்கும் மக்கள் மேலும் பீதிக்கு உள்ளாகியுள்ளனர். பெரும்பாலான உணவகங்கள் மூடப்பட்டு, தொழிலாளர்கள் வேலையிழக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

தீவிர நடவடிக்கைகள் மூலம் இவற்றுக்குத் தீர்வு காண வேண்டிய ஒன்றிய பாஜக அரசு இதில் இருந்து செய்திகளைத் திசைதிருப்புவதற்காகவே தொகுதி மறுவரையறை scriptஐத் தற்போது கையிலெடுத்துள்ளது. பாஜக ஜாடிக்கு ஏற்ற மூடியாக, மக்கள் பிரச்சினையை மறந்தும் பேசமாட்டோம் எனத் தங்களுக்குத் தாங்களே வாய்ப்பூட்டு போட்டுக்கொண்டுள்ள அதிமுகவோ, மாநில அரசு என்ன செய்கிறது எனக் கேட்கிறார்கள்.

சிலிண்டர் வழங்குவதும், வெளியுறவுக் கொள்கையும் மாநில அரசின் கையிலா இருக்கிறது? மாநில அரசு தன்னால் இயன்ற அத்தனை நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளது. "இத்தனைக்கும் பொறுப்பான ஒன்றிய பாஜக அரசு என்ன செய்கிறது?" என்பதே மக்கள் முன்வைக்கும் கேள்வி," என்று முதல்வர் குறிப்பிட்டுள்ளார்.

முன்னதாக நேற்று (மார்ச் 24) மேற்காசியப் போரின் தாக்கங்களில் இருந்து இந்திய மக்களைப் பாதுகாக்க, மத்திய அரசு எடுத்துள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் என்ன என்று பிரதமர் நரேந்திர மோடிக்கு முதல்வர் மு.க. ஸ்டாலின் கேள்வி எழுப்பியிருந்தார். இந்நிலையில், இன்று மீண்டும் சிலிண்டர் பிரச்சினையை முன்வைத்து முதல்வர் கேள்வி எழுப்பியுள்ளார்.

அனைத்துக் கட்சிக் கூட்டம்: மேற்கு ஆசியாவில் ஏற்பட்டுள்ள போர் காரணமாக, நம் நாட்டில் சமையல் எரிவாயு (எல்பிஜி) தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதனால் உணவகங்கள் சிக்கலை எதிர் கொண்டு வருகின்றன.

இதனிடையே, இதுகுறித்து விவாதிக்க அனைத்துக் கட்சி கூட்டத்தை கூட்டுமாறு எதிர்க்கட்சித் தலைவர்கள் வலியுறுத்தி வந்தனர். காங்கிரஸ் மூத்த தலைவர் ஜெய்ராம் ரமேஷ், தற்போதைய மேற்கு ஆசிய மோதலை அரசு கையாளும் விதத்தை கடுமையாக விமர்சித்து இருந்தார்.

இந்நிலையில், நேற்று (மார்ச் 25) மாலை அனைத்து கட்சி கூட்டத்துக்கு மத்திய அரசு அழைப்பு விடுத்துள்ளது. இதில் மேற்கு ஆசிய போரால் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பது குறித்து விரிவாக விவாதிக்கப்படும் எனத் தெரிகிறது.

## தேர்தல் பறக்கும் படையினர் பறிமுதல் செய்த பணம், நகைகளை மீட்க முடியாமல் மக்கள் தவிப்பு

மதுரை: மார்ச்.26-

மதுரை மாவட்டத்தில் தேர்தல் பறக்கும் படையினர் பறி முதல் செய்த பணம் மற்றும் பொருட்களை மீட்க போதிய விழிப்புணர்வு இன்றி பொது மக்கள் திண்டாடி வருகின்றனர்.



தமிழகத்தில் ஏப்.23 ம் தேதி சட்டப்பேரவைத் தேர்தல் நடை பெற உள்ளது. தற்போது தேர்தல் நடத்தை விதிகள் தீவிரமாக அமல்படுத்தப்பட்டுள்ளன. இதனால், மதுரை மாவட்டத்தில் தேர்தல் பறக்கும் படையினர் 24 மணி நேரமும் தீவிர வாகனச்சோதனையில் ஈடுபட்டு வருகின்றனர்.

ரூ.50 ஆயிரத்துக்கு மேல் உரிய ஆவணமின்றி ரொக்கமாக பணம் எடுத்துச் செல்லவும், ரூ.2 லட்சத்துக்கு அதிகமான மதிப்புள்ள நகையை எடுத்துச் செல்லவும் அனுமதி இல்லை.

மாவட்டத்தில் இதுவரை ரூ.1 கோடிக்கும் அதிகமான ரொக்கம், ரூ.60 லட்சத்துக்கும் அதிகமான மதிப்புள்ள தங்க நகைகளை தேர்தல் பறக்கும் படையினர் பறிமுதல் செய்துள்ளனர்.

இதில், மருத்துவமனைக்கு செல்வோர், திருமணம், காதணி விழா வீட்டார், வியாபாரிகள் உள்ளிட்டோர் அதிக அளவு சிக்கியுள்ளனர். இவர்கள், தங்கள் பொருட்களை திரும்பப் பெற என்ன செய்வதென்று தெரியாமல் திண்டாடும் நிலை ஏற்பட்டுள்ளது.

இதுகுறித்து மாவட்டத் தேர்தல் அலுவலரும், ஆட்சியருமான பிரவீன்குமார் கூறுகையில், பொதுமக்களிடம் இருந்து உரிய ஆவணங்கள் இன்றி பறிமுதல் செய்யப்பட்ட பணம், நகைகளை விரைவில் அவர்கள் மீட்டுக் கொள்ள மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் தலைமையில் அதிகாரிகள் அடங்கிய மாவட்டக் குறை தீர்க்கும் குழு அமைக்கப்பட்டுள்ளது. இந்தக் குழு ஆட்சியர் அலுவலக புதிய கட்டிடத்தில் உள்ள தரைதளத்தில் இயங்கி வருகிறது.

இந்தக் குழுவில், பாதிக்கப்பட்டவர்கள் வங்கிப் பணம் எடுத்த ரசீது, ஜிஎஸ்டி ரசீது, திருமணச் செலவு எனில் திருமண அழைப்பிதழ், சொத்து விவகாரம் எனில் ஒப்பந்தப் பத்திரம், மருத்துவச் செலவுகளுக்காக எடுத்துச் சென்ற பணத்தை திரும்ப பெற, மருத்துவமனையின் அனுமதி ரசீது, மருத்துவரின் பரிந்துரை சீட்டு, பரிசோதனை அறிக்கை, நோயாளியின் தகவல், பணம் எதற்காக எடுக்கப் பட்டது என்ற விளக்க கடிதம் போன்ற ஆவணங்களுடன் விண்ணப்பிக்க வேண்டும்.

அவர்கள் மனுதாரரிடம் உரிய விசாரணை மேற்கொண்டு, ஆவணங்களை சரிபார்த்து பணம், நகைகளை விடுவிக்கும் அனுமதியை அளிப்பர். அந்த அனுமதி கடிதம் மூலம் கருவூலத்தில் இருந்து பணம், நகைகளைப் பெற்றுக் கொள்ளலாம் என அவர் கூறினார்.

## சிகிச்சைக்கு பணம் கொண்டு சென்றால் வாட்ஸ்அப் ஆதாரம் போதும்

### அர்ச்சனா பட்நாயக் அறிவிப்பு

சென்னை, மார்ச்.26-

தமிழ்நாட்டில் ஒரே கட்டமாக ஏப்ரல் 23ந் தேதி சட்டசபை தேர்தல் நடக்கிறது. வேட்புமனு தாக்கல் வருகிற 30ந் தேதி தொடங்குகிறது. ஓட்டு எண்ணிக்கை மே 4ந் தேதி நடக்கிறது. தேர்தல் நடத்தை விதிகள் அமலானதை தொடர்ந்து வாகன சோதனை கள் தமிழகம் முழுவதும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தேர்தல் நடத்தை விதிகள் அமலில் இருக்கும்போது அரசு, அரசியல் கட்சிகள், வேட்பாளர்கள், பொதுமக்கள் ஆகியோரின் அனைத்து நடவடிக்கைகளிலும் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

அதன்படி பொதுமக்கள் யாரும் தேர்தல் நடவடிக்கைகள் முடியும்வரை அதாவது வரும் மே 6ந் தேதிவரை தனிநபராக ரூ.50 ஆயிரத்துக்கு மேல் தொகையை எடுத்துச் செல்ல முடியாது. அப்படி கொண்டு செல்வதாக இருந்தால், அதற்கான ஆதாரங்களை கையில் வைத்திருக்க வேண்டும். இல்லாவிட்டால் பறக்கும்படையினர் அந்தத் தொகையை பறிமுதல் செய்து வருகின்றனர்.

நேற்று காலை வரை உரிய ஆவணங்கள் இல்லாமல் கொண்டு செல்லப்பட்ட ரூ.151.93 கோடி மதிப்பிலான ரொக்கம் மற்றும் தங்கம், வெள்ளி, இலவச பொருட்கள் உள்ளிட்டவை பறிமுதல் செய்யப்பட்டு உள்ளன. அவற்றில் தங்கம், வெள்ளி ஆகியவற்றின் மதிப்பு மட்டும் ரூ.92.02 கோடியாகும். ரூ.72 லட்சம் மதிப்புள்ள மதுபானங்களும் பிடிபட்டுள்ளன. தேர்தல் நடத்தை விதிகளால் பணம் கொண்டு செல்வதில் மக்கள் இன்னல்களை சந்தித்து வருகின்றனர்.

இந்த நிலையில், மருத்துவ சிகிச்சைக்கு எடுத்துச்செல்லப்பட்ட பணம் பறிமுதல் செய்யப்பட்டது தொடர்பாக தலைமை தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் செய்தியாளர்கள் சந்திப்பில் கூறியதாவது:

மக்களை தொல்லை செய்யக்கூடாது என பறக்கும் படைக்கு அறிவுறுத்தல் அளிக்கப்பட்டுள்ளது. பொதுமக்கள் கொண்டு செல்லும் பணத்தை பறிமுதல் செய்யக்கூடாது என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மருத்துவக் காரணத்திற்காக பொதுமக்கள் ரூ.50,000க்கு மேல் பணம் எடுத்துச் சென்றால் அதற்கான ஆதாரத்தை வாட்ஸ்அப்பில் கூட காண்பிக்கலாம்; அவ்வாறு காண்பித்தால் பணம் எடுத்துச்செல்ல அனுமதிக்கப்படுவர்.

ரூ.50,000க்கு மேல் அனுமதிக்கவேண்டும் என்ற வணிகர்களின் கோரிக்கையை தேர்தல் ஆணையத்தின் கவனத்திற்கு கொண்டு சென்றுள்ளோம். நகர்ப்புற பகுதிகளில் வாக்குப்பதிவை அதிகரிக்க தேர்தல் ஆணையம் பல்வேறு முயற்சிகளை எடுக்கிறது; தமிழகத்தில் எப்போதும் நகர்ப்புறங்களில் வாக்குப்பதிவும் மிகக் குறைவாகவே இருக்கிறது. வெறுப்பு பிரசாரங்களை கண்காணிக்க பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

## அதிமுக கூட்டணியில் பாஜக, பாமக, அமமுகவுக்கு ஒதுக்கப்பட்ட தொகுதிகள் எவை? : முழு பட்டியல்

சென்னை: மார்ச்.26-

அதிமுக கூட்டணியில் உள்ள கட்சிகள் போட்டியிடும் தொகுதிகளின் பட்டியல் இன்று வெளியிடப்பட்டது.



அதிமுக தலைமை அலுவலகத்தில் நடந்த நிகழ்ச்சியில் அக்கட்சியின் பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி, பாஜக மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரன், பாமக தலைவர் அன்புமணி, அமமுக பொதுச் செயலாளர் தினகரன், ஐஜேகே தலைவர் பாரிவேந்தர், ஜான்பாண்டியன், பூவை ஜெகன் மூர்த்தி உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். இதனைத் தொடர்ந்து கூட்டணிக் கட்சிகளுக்கு ஒதுக்கப்பட்ட தொகுதிகளின் விவரத்தை எடப்பாடி பழனிசாமி அறிவித்தார்.

பாஜக போட்டியிடும் 27 தொகுதிகள்:

மயிலாப்பூர்
தளி
மொடக்குறிச்சி
உதகமண்டலம்
அவினாசி (தனி)
திருப்பூர் தெற்கு
கோவை வடக்கு
கந்தர்வக்கோட்டை (தனி)
புதுக்கோட்டை
திருப்பத்தூர்
மதுரை தெற்கு
சாத்தூர்
திருச்செந்தூர்
வாசுதேவநல்லூர் (தனி)
ராதாபுரம்
நாகர்கோவில்
விளவங்கோடு
ஆவடி
திருவண்ணாமலை
தஞ்சாவூர்
திருவாரூர்
அறந்தாங்கி
மானாமதுரை (தனி)
ராமநாதபுரம்
குளச்சல்
பத்மநாபபுரம்
ராசிபுரம் (தனி)

பாமக போட்டியிடும் 18 தொகுதிகள்

சேலம் மேற்கு
சேலம் வடக்கு
தருமபுரி
பென்னாகரம்
விக்கிரவாண்டி
சோளிங்கர்
திருப்போரூர்
உத்திரமேரூர்
ஜெயங்கொண்டம்
விருதாச்சலம்
மயிலாடுதுறை
செஞ்சி
போளூர்
கிழ் வேளூர் (தனி)
ரிஷிவந்தியம்
காட்டுமன்னார்கோயில் (தனி)
பெரம்பூர்
அம்பத்தூர்

அமமுக போட்டியிடும் 11 தொகுதிகள்:

பெரியகுளம் (தனி)
மன்னார்குடி
திருவையாறு
காரைக்குடி
திருப்பத்தூர்
நாங்குநேரி
ஒட்டபிடாரம் (தனி)
திருச்சி மேற்கு
சைதாப்பேட்டை
பூந்தமல்லி (தனி)
மடத்துகுளம்

தமாகா போட்டியிடும் 5 தொகுதிகள்:

ஒட்டன்சந்திரன்
ஈரோடு மேற்கு
ராணிப்பேட்டை
கிள்ளியூர்
கும்பகோணம்.

ஐஜேகே போட்டியிடும் 2 தொகுதிகள்:


பல்லாவரம்
குன்னம்

தமமுகவுக்கு ராஜபாளையம் தொகுதியும், புரட்சிபாரதம் கட்சிக்கு கீழ்வைத்தியனான் குப்பம் தொகுதியும் ஒதுக்கப்பட்டுள்ளது.

## தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் பொதுச்செயலாளர் சஸ்பெண்ட்

சென்னை, மார்ச்.26-

தமிழக சட்டசபை தேர்தல் ஏப்ரல் மாதம் 23ந் தேதி நடைபெற உள்ளதை முன்னிட்டு, அதற்கான வேட்புமனு தாக்கல் வரும் 30ந் தேதி தொடங்க இருக்கிறது. சட்டசபை தேர்தலுக்கான வாக்கு எண்ணிக்கை மே 4ம் தேதி நடைபெற்று, அதே நாளில் தேர்தல் முடிவுகளும் அறிவிக்கப்பட உள்ளது.



TAMILNADU CONGRESS COMMITTEE

K. Selvaperunthagai, M.L.A.
PRESIDENT

Date : 25.03.2026

ANNOUNCEMENT

Shri. D. Selvam, S/o. Dakshinamurthy, General Secretary, TNCC is hereby suspended from the Congress Party with immediate effect for anti party activities, pending enquiry.



இந்த சூழலில் தேர்தலில் காங்கிரஸ் கட்சியுடன் கூட்டணி அமைக்க த.வெ.க. பேச்சுவார்த்தை நடத்தியதாக தகவல்கள் வெளியானது. இருப்பினும், கடைசி நேரத்தில் திமுகவுடன் காங்கிரஸ் தொகுதி பங்கீடு ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டதால், த.வெ.க. தனித்துப் போட்டியிடுவதாக அறிவித்தது.

இதனிடையே சமீபத்தில் பொதுக்கூட்ட மேடையில் பேசிய த.வெ.க. நிர்வாகி ஆதவ் அர்ஜுனா, "தி.மு.க.விடன் பணத்தை வாங்கிக் கொண்டு சில காங்கிரஸ் நிர்வாகிகள் கூட்டணி அமைத்துள்ளனர். காங்கிரஸ் ஒன்றுமில்லாமல் ஆகிவிட்டதால், அக்கட்சியின் நிர்வாகிகள் த.வெ.க.வில் இணைய வாசலில் காத்துக் கொண்டுள்ளனர். இரண்டு நாட்களில் காங்கிரஸ் நிர்வாகிகள் பலர் த.வெ.க.வில் இணைய உள்ளனர்" என்று தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் தமிழ்நாடு காங்கிரஸ் பொது செயலாளர் டி. செல்வத்தை சஸ்பெண்ட் செய்து மாநில தலைவர் செல்வப்பெருந்தகை உத்தரவிட்டுள்ளார். கட்சியின் கட்டுப்பாட்டை மீறி செயல்பட்டதால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

# சின்னாளபட்டி கடைவீதி ஸ்ரீகாளியம்மன் கோவில் திருவிழா களைகட்டிய கிடாவெட்டி வழிபாடு



சின்னாளபட்டி மார்ச் 26-

திண்டுக்கல் மாவட்டம் சின்னாளபட்டி விஸ்வகர்மா சமுதாயத்திற்குச் சொந்தமான 150 ஆண்டுகள் பழமைவாய்ந்த ஸ்ரீ காளியம்மன் கோவில் திருவிழா வெகு விமரிசையாக நடைபெற்றது. மார்ச் 24ல் பூசாரி அழைப்புடன் தொடங்கிய விழாவில், இன்று அதிகாலை சந்தனகருப்புசாமி கோவில் பகுதியிலிருந்து அலங்கரிக்கப்பட்ட அம்மன் கரகம் மேளதாளங்களுடன் அழைத்து வரப்பட்டது.

*வழிபாட்டுச் சிறப்புகள்:* அம்மன் கரகம் கோவிலுக்குள் நுழையும்போது விசேஷ கிடாவெட்டி வழிபாடு நடைபெற்றது. தொடர்ந்து முளைப்பாரி, மாவிளக்கு எடுத்தல் மற்றும் மாலை 4 மணியளவில் பொதுமக்களின் பொங்கல் வைக்கும் நிகழ்வு நடைபெற்றது. அம்மனுக்கு ராஜாராம் குருக்கள் சிறப்பான அலங்காரங்களைச் செய்திருந்தார்.

*பக்தர்கள் வருகை:* விழாவிற்காக திண்டுக்கல், பழனி, கரூர், காரைக்குடி, மதுரை, திருச்சி, போடி, ஒட்டன்சத்திரம் ஆகிய ஊர்களில் இருந்து விஸ்வகர்மா சமுதாய மக்கள் திரளாக வந்து வழிபாடு செய்தனர். விழா ஏற்பாடுகளைக் கோவில் கமிட்டியினர் ஒருங்கிணைத்திருந்தனர்.



# தமிழக வெற்றி கழகம் மற்றும் நாம் தமிழர் கட்சியைச் சேர்ந்த 30க்கும் மேற்பட்ட இளைஞர்கள் திமுகவில் ஐக்கியம்

சின்னாளபட்டி மார்ச். 26-

ரெட்டியார்சத்திரம் ஒன்றியம், மாங்கரை ஊராட்சி எம்.அம்மாபட்டியைச் சேர்ந்த தமிழக வெற்றி கழகம் மற்றும் நாம் தமிழர் கட்சியைச் சேர்ந்த 30க்கும் மேற்பட்ட இளைஞர்கள் திமுகவில் இணைந்தனர். ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர் ஜெ.ஜோசப் தலைமையில், அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்களைச் சந்தித்து தங்களை இணைத்துக் கொண்டனர்.

*அமைச்சரின் உரை:* புதிய உறுப்பினர்களுக்கு வாழ்த்து தெரிவித்த அமைச்சர், "ஊழலற்ற அரசு வேலைவாய்ப்பு மற்றும் கிராமப்புற விளையாட்டு வீரர்களுக்கு வழங்கப்பட்டுள்ள 3% உள் ஒதுக்கீடு போன்ற திட்டங்களே இளைஞர்களை திமுக நோக்கி ஈர்க்கிறது" என்றார்.

* முக்கியப் பங்கேற்பாளர்கள்:* இந்நிகழ்வில் மாவட்ட அவைத்தலைவர் வழக்கறிஞர் காமாட்சி, துணைச் செயலாளர் நாகராஜன், தலைமை செயற்குழு உறுப்பினர் ஆத்தூர் நடராஜன், தண்டபாணி, ஒன்றிய செயலாளர்கள் நெடுஞ்செழியன், பிள்ளையார்நத்தம் முருகேசன், திண்டுக்கல் மாநகர பொருளாளர் மீடியா சரவணன், துணை அமைப்பாளர்கள் விவேகானந்தன், பஞ்சம்பட்டி மணி, மாங்கரை திருப்பதி, பேரூராட்சி தலைவர் நந்தகோபால், மாமன்ற உறுப்பினர் நெல்லை சுபாஸ், முன்னாள் உறுப்பினர்கள் ஜஸ்டீன்மிக்கேல்லம்மாள், சுமதி கணேசன், காளீஸ்வரி மலைச்சாமி உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.



■ மதுரை மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே.பிரவீன்குமார், திண்டுக்கல் மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித் தலைவர் சரவணன் ஆகியோர் தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல் 2026 நடைபெற உள்ளதை முன்னிட்டு மதுரை திண்டுக்கல் மாவட்ட எல்லையான பரளிபுதூர் பகுதியில் பறக்கும் படை மற்றும் நிலையான கண்காணிப்புக் குழுவினர் வாகன தணிக்கையில் ஈடுபட்டு வருவதை ஆய்வு செய்து பார்வையிட்டனர். மதுரை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அரவிந்த், திண்டுக்கல் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மரு.அ.பிரதீப் ஆகியோர் உடன் உள்ளனர்.



■ மக்களவையில் கொண்டுவரப்பட்ட திருநர் உரிமைகள் பாதுகாப்பு திருத்த மசோதா இந்திய அரசியலமைப்பு வழங்கும் அடிப்படை உரிமைகளுளுக்கும், சர்வதேச மனித உரிமைகளுக்கும் எதிரானது எனக் கூறி அதை உடனடியாக திரும்ப பெற வேண்டும் என திருநர் மசோதா எதிர்ப்பு போராட்ட குழு வலியுறுத்தியது. இதனை முன்னிட்டு அண்ணா சிலை அருகே கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

# மொத்த கட்சி VS ஒத்த கட்சி!"* *"ஒரு முறை கொடுத்துத்தான் பாருங்களேன்!"* *சீமானின் தனித்துவ யுத்தம் ஒரு அரசியல் அலசல்




*சென்னை, மார்ச். 26-

"மொத்த கட்சி ஒரு பக்கம்... நான் ஒத்த கட்சி ஒரு பக்கம்... உன் வாக்கை தனித்த எனக்கு கொடுத்துதான் பாரே..." நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமானின் இந்த முழக்கம், 2026 சட்டமன்றத் தேர்தல் களத்தில் ஒரு புதிய விவாதத்தை உருவாக்கியுள்ளது.

*இந்தத் தலைப்பில் ஒரு ஆழமான பார்வை:*

*1. திராவிட தேசியக் கட்சிகளுக்கு நேரடிச் சவால்:*

தமிழக அரசியலில் அரை நூற்றாண்டுகளாக நிலைபெற்றுள்ள திராவிடக் கட்சிகள் மற்றும் தேசியக் கட்சிகள் அனைத்தும் ஏதோ ஒரு கூட்டணியின் கீழ்தான் களம் காண்கின்றன. ஆனால், "கூட்டணி என்பது கொள்கை இல்லாதவர்களின் சங்கமம்" என்று விமர்சிக்கும் சீமான், 234 தொகுதிகளிலும் தனித்துப் போட்டியிடுவதன் மூலம் தன்னை ஒரு மாற்று சக்தியாக நிலைநிறுத்த முயல்கிறார்.

*2. நிர்வாகப் பரவலாக்கம்: தமிழ்நாட்டிற்கு 5 தலைநகரங்கள்!*

சீமானின் 2026 தேர்தல் அறிக்கையில் மிக முக்கியமான மற்றும் விவாதத்திற்குள்ளான அம்சம் "ஐந்து தலைநகரங்கள்" கொள்கை ஆகும். நிர்வாக வசதிக்காகவும், அதிகாரத்தைப் பரவலாக்கவும் அவர் முன்வைக்கும் திட்டம் இதோ:

*திருச்சி:* நிர்வாகத் தலைநகரம் (Administrative Capital), *சென்னை:* தொழில்நுட்பத் தலைநகரம் (Tech Capital), *கோவை:* தொழில் மற்றும் வணிகத் தலைநகரம் (Business Capital), *மதுரை:* கலை மற்றும் பண்பாட்டுத் தலைநகரம் (Cultural Capital), *கன்னியாகுமரி:* அறிவுசார் தலைநகரம் (Epistemological Capital). சென்னையில் மட்டும் குவியும் நெருக்கடியைக் குறைத்து, தமிழகத்தின் அனைத்துப் பகுதிகளையும் சமமாக வளர்ச்சி அடையச் செய்வதே இதன் நோக்கம் என்கிறார் சீமான்.

*3. 'ஒத்த கட்சி' தனித்து நிற்றலின் அரசியல் பலம்:*

"நான் ஒத்த கட்சி" என்று அவர் குறிப்பிடுவது வெறும் எண்ணிக்கையை அல்ல; அது அவரது கொள்கை உறுதியைக் காட்டுகிறது. மற்ற கட்சிகள் தொகுதிப் பங்கீட்டில் மல்லுக்கட்டிக் கொண்டிருக்கும்போது, இவர் தனது வேட்பாளர்களை முன்கூட்டியே அறிவித்து களப்பணியில் முந்துகிறார். 50 சதவீத இடங்களை பெண்களுக்கு ஒதுக்கி, "பாலினச் சமத்துவத்தை" பேச்சோடு நிறுத்தாமல் செயலில் காட்டியதும் இந்த 'ஒத்த கட்சி'யின் துணிச்சல்தான்.

*4. "வாக்கைக் கொடுத்துத்தான் பாருங்களேன்" வாக்காளர்களுக்கு விடுக்கும் அழைப்பு:*

வாக்காளர்களிடம் அவர் வைக்கும் கோரிக்கை மிகவும் நேரடியானது: "மாறி மாறி ஓட்டுப் போட்டுப் பார்த்தீர்கள், இப்போது ஒருமுறை எனக்கு ஓட்டுப் போட்டுப் பாருங்கள்" என்பதுதான் அது. பாரம்பரிய அரசியல் கட்டமைப்பை உடைத்து, எளிய மக்களின் பிள்ளைகளாகத் தங்களை முன்னிறுத்துவது இளைஞர்களிடையே பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.



# 'நான் முதல்வன்' தந்த நாயகன்! தம்பித்தோட்டம் பள்ளிக்கு வந்து ஆசிரியர்களிடம் ஆசி பெற்ற ஐஏஎஸ் அதிகாரி

சின்னாளபட்டி மார்ச். 26-

தமிழக அரசின் 'நான் முதல்வன்' திட்டத்தின் கீழ் பயின்று ஐ.ஏ.எஸ். தேர்வில் தேசிய அளவில் 213வது இடமும், தமிழக அளவில் 7வது இடமும் பெற்றுச் சாதனை படைத்த சின்னாளபட்டி மாணவர் அருண்பாண்டியன் (26), தான் பயின்ற தம்பித்தோட்டம் மேல்நிலைப் பள்ளிக்கு வந்து ஆசிரியர்களிடம் வாழ்த்து பெற்றார்.

முன்னாள் ராணுவ வீரர் நடராஜன் தமிழ்ச்செல்வி தம்பதியரின் மகனான இவர், 2015ல் 10ம் வகுப்பில் மாநில அளவில் இரண்டாம் இடம் பெற்றவர். அப்போது எதிர்க்கட்சித் தலைவராக இருந்த மு.க.ஸ்டாலின் அவர்களால் ரூ.15,000 பரிசு வழங்கிப் பாராட்டப்பட்டவர். மருத்துவப் படிப்பை முடித்த பின், அரசுப் பயிற்சி மையத்தில் பயின்று தற்போது ஐ.ஏ.எஸ். அதிகாரியாக உயர்ந்துள்ளார்.

தலைமை ஆசிரியை ஆர்.எஸ்.கிரிஜா, தனக்கு ஊக்கமளித்த ஆசிரியர் ஜெ.செந்தில்குமார், கணினி ஆசிரியை மகாலெட்சுமி மற்றும் தமிழ் ஆசிரியர் கலாவதி ஆகியோரிடம் இனிப்பு வழங்கி ஆசி பெற்றார். "மகிழ்ச்சியாகப் படியுங்கள், உயர்நிலைக்கு வரலாம்" என மாணவர்களிடம் கலந்துரையாடி அவர்களுக்கு உற்சாகமூட்டினார்.



■ மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே.பிரவீன்குமார், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை பொதுத்தேர்தல் 2026 நடைபெற உள்ளதை முன்னிட்டு மதுரை மாவட்டம், கிழக்கு சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட செட்டிகுளம் கிராமத்தில் நடைபெற்ற மகளிர் சுய உதவிக் குழுக்களின் சமத்துவ பொங்கல் நிகழ்ச்சியில் மகளிருடன் இணைந்து கும்மி அடித்து, மாட்டு வண்டியில் பயணம் செய்து "என் வாக்கு என் கடமை ரு 100% வாக்களிப்போம்" என்ற விழிப்புணர்வை ஏற்படுத்தி பொதுமக்களுடன் உறுதிமொழி எடுத்துக்கொண்டார்.



■ புதுச்சேரியில் காசநோய் குறித்து மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தும் நோக்கில், 100 நாள் பிரச்சாரம் தொடங்கப்பட்டது. ஓதியம்பட்டு கிராமத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், சுகாதாரத்துறை இயக்குனர் செவ்வேள் விழிப்புணர்வு வாகனத்தை கொடியசைத்து துவக்கி வைத்தார். இந்த பிரச்சாரம் மூலம் காச நோய் அறிகுறிகள் பரிசோதனை மற்றும் சிகிச்சை குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தபட உள்ளது.




# மொத்தமாக விநியோகிக்கப்படும் பூத் ஸ்லிப்புகள்! தமிழக வாழ்வுரிமைக் கட்சியினர் புகார்

தேனி மார்ச். 26-

கம்பம் சட்டமன்றத் தொகுதியில் நடைபெறவுள்ள பொதுத்தேர்தலில் முறைகேடுகளைத் தவிர்க்கக் கோரி, தமிழக வாழ்வுரிமைக் கட்சி சார்பில் உத்தமபாளையம் வருவாய் கோட்டாட்சியரிடம் (RDO) புகார் மனு அளிக்கப்பட்டது. தேனி மாவட்டச் செயலாளர் பகவதி தலைமையில் கட்சி நிர்வாகிகள் இந்த மனுவை வழங்கினர்.

*மனுவின் முக்கிய அம்சங்கள்:*

தற்போதுள்ள வாக்காளர் பட்டியல்கள் மிகவும் மோசமான நிலையில் உள்ளதாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. கடந்த கால தேர்தல்களில் வாக்காளர்களுக்கு வழங்கப்பட வேண்டிய பூத் ஸ்லிப்புகள் (Booth Slips) ஆளுங்கட்சியினர் மற்றும் பணபலம் படைத்தவர்களிடம் மொத்தமாக வழங்கப்படுவதாகப் புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் (BLO) ஆளுங்கட்சியினருக்கு ஆதரவாகச் செயல்படுவதைத் தடுத்து நிறுத்தி, நேர்மையான தேர்தலை உறுதி செய்ய வேண்டும் என மனுவில் வலியுறுத்தப்பட்டுள்ளது.



# பாமகவில் முதற்கட்டமாக 3 வேட்பாளர்கள் அறிவிப்பு

சென்னை, மார்ச். 26-

சட்டப்பேரவைத் தேர்தலில் போட்டியிடும் பாமக வேட்பாளர்களின் முதற்கட்ட பட்டியலில் மூன்று பேர் இடம்பெற்றுள்ளனர். அதன்படி, கீழ்வேளூரில் வடிவேல் இராவணன் போட்டியிருக்கிறார்.

இது குறித்து பாமக தலைவர் அன்புமணி வெளியிட்டுள்ள அறிக்கை: தமிழ்நாடு சட்டப்பேரவைக்கு வரும் ஏப்.23ஆம் தேதி நடைபெறவிருக்கும் தேர்தலில், அதிமுக தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணியில் பாட்டாளி மக்கள் கட்சிக்கு 18 தொகுதிகள் ஒதுக்கப்பட்டுள்ளன. அதில் தற்போது முதற்கட்டமாக மூன்று வேட்பாளர்கள் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது. மீதமுள்ள 15 தொகுதிகளுக்கான வேட்பாளர்கள் பின்னர் அறிவிக்கப்படுவார்கள்.

அதிமுக முதற்கட்ட வேட்பாளர்கள் பட்டியல் விவரம் வருமாறு:

1. கீழ்வேளூர் ச.வடிவேல் இராவணன், பொதுச் செயலாளர்.

2. அம்பத்தூர் கே.என்.சேகர், முன்னாள் நகர்மன்றத் தலைவர், மாநிலத் துணைத் தலைவர்.

3. செஞ்சி அ.கணேஷ் குமார், முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினர், இளைஞரணித் தலைவர்.




## தொழில்நுட்பமே நாளைய ஆயுதம்!" மாணவர்களை வேலைவாய்ப்பிற்குத் தயார் செய்யும் திசையன்விளை பல்கலைக்கழகக் கல்லூரி

திசையன்விளை மார்ச். 26-

மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகக் கல்லூரி வணிகவியல் துறை மற்றும் ThisAI Technologies Pvt. Ltd. நிறுவனம் இணைந்து, "Professional Exchange in the Modern World" என்ற தலைப்பில் ஒரு நாள் பயிற்சி பட்டறையை சிறப்பாக நடத்தின.

கல்லூரி முதல்வர் முனைவர் து. லில்லி தலைமையில் நடைபெற்ற இந்த விழாவிற்கு, வணிகவியல் துறைத் தலைவர் ஒயிட்டன் சகாயராஜ் வரவேற்புரை வழங்கினார். உதவிப் பேராசிரியர் முனைவர் முருகன் சிறப்பு விருந்தினர்களை அறிமுகப்படுத்தினார்.

ThisAI நிறுவனத்தின் இயக்குனர் விக்னேஸ்வரன் B.E, Talent Acquisition Specialist முஹம்மது MBA மற்றும் AI Senior Developer கீதா B.E ஆகியோர் கலந்துகொண்டு, செயற்கை நுண்ணறிவு (AI) மற்றும் நவீனத் தொடர்பியல் குறித்து மாணவர்களுக்கு நேரடிப் பயிற்சிகளை வழங்கினர்.

வணிகவியல் துறை உதவிப் பேராசிரியர் முனைவர் ஜெயஸ்ரீ நன்றியுரை வழங்கிய இந்நிகழ்ச்சியில், 50க்கும் மேற்பட்ட மாணவ மாணவிகள் மற்றும் பல்வேறு துறை பேராசிரியர்கள் கலந்துகொண்டனர்.



■ தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத்தேர்தலில் 100 சதவீத வாக்குப்பதிவை உறுதி செய்யும் வகையில், தேனி மாவட்ட நிர்வாகம் பல்வேறு விழிப்புணர்வுப் பணிகளை முன்னெடுத்து வருகிறது. இதன் ஒரு பகுதியாக, முறையான வாக்காளர் கல்வி மற்றும் தேர்தல் பங்கேற்பு (SVEEP) திட்டத்திற்கான பிரத்யேக தேர்தல் விழிப்புணர்வு இலச்சினையை (Logo) மாவட்ட தேர்தல் அலுவலரும் ஆட்சித்தலைவருமான ரஞ்ஜீத் சிங், இ.ஆ.ப, வெளியிட்டார்.




## காசநோய் இல்லா தமிழகம்!" கே.புதுக்கோட்டை சி.எஸ்.ஐ பள்ளியில் விழிப்புணர்வு வினாடிவினா போட்டி

திண்டுக்கல் மார்ச். 26-

ரெட்டியார்சத்திரம் ஒன்றியம், கே.புதுக்கோட்டை சி.எஸ்.ஐ தொடக்கப்பள்ளியில் உலக காசநோய் எதிர்ப்பு விழிப்புணர்வு தினத்தை முன்னிட்டுச் சிறப்பு கருத்தரங்கம் மற்றும் வினாடிவினா போட்டிகள் நடைபெற்றன.

பள்ளித் தலைமை ஆசிரியர் ஆ.பிரபானந்த் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், முன்னாள் கூட்டுறவுத்துறை துணைப்பதிவாளர் டி.டேனியல் முன்னிலை வகித்து உரையாற்றினார். ஒட்டன்சத்திரம் இந்திய மருத்துவக்கழகச் செயலாளர் மற்றும் அரசு மருத்துவமனை முன்னாள் தலைமை மருத்துவர் டாக்டர் எ.ஆசைத்தம்பி சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு, மாணவர்களுக்குக் காசநோய் தடுப்பு மற்றும் தனிமனிதச் சுகாதாரம் குறித்து விளக்கமளித்தார்.

ஆசிரியர் குமாரி வரவேற்புரை ஆற்றினார். வினாடிவினா போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ மாணவிகளுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன. விழாவின் நிறைவாகப் பள்ளி வளாகத்தில் மரக்கன்றுகள் நடப்பட்டுப் பசுமை விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

## அணு ஆயுதங்களை கைவிட மறுத்த முடிவு சரியானதே என்பது நிரூபணமானது: வட கொரிய அதிபர் கிம் ஜாங் உன்

சியோல்:, மார்ச், 26-

ஈரான் உடனான அமெரிக்காவின் போரை பார்க்கையில் தனது நாடு அணு ஆயுதங்களை தக்கவைத்துக் கொள்ள எடுத்த முடிவு சரியானது என்பதை நிரூபிக்கிறது என வட கொரிய அதிபர் கிம் ஜாங் உன் தெரிவித்துள்ளார். அமெரிக்காவின் அழுத்தத்தையும், அதன் இனிமையான பேச்சுகளையும் வட கொரியா நிராகரித்தது நியாயம்தான் என்பதை தற்போதைய சூழல் தெளிவாகக் காட்டுகிறது என கூறினார்.

வட கொரியத் தலைவர் கிம் ஜாங் உன், தனது நாட்டின் அணுசக்தி அந்தஸ்தை திரும்பபெற முடியாதபடி உறுதிப்படுத்துவதாகவும், அதே நேரத்தில் தென் கொரியா மீது கடுமையான நிலைப்பாட்டைத் தக்கவைத்துக் கொள்வதாகவும் உறுதியளித்துள்ளார். தென் கொரியாவை அவர் "மிகவும் விரோதமான" நாடு என்று குறிப்பிட்டதாக கூறப்படுகிறது.

நேற்று முன்தினம் பியோங்யாங்கின் ஒப்புதல் அளிக்கும் நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரையில், மத்திய கிழக்கில் நடக்கும் போரைக் குறிப்பிடுவது போல, அமெரிக்கா உலகளாவிய "அரச பயங்கரவாதம் மற்றும் ஆக்கிரமிப்பு" செய்வதாக கிம் குற்றம் சாட்டினார். மேலும், அதிகரித்து வரும் அமெரிக்க எதிர்ப்பு உணர்வுகளுக்கு மத்தியில், வாஷிங்டனுக்கு எதிரான ஒரு ஐக்கிய முன்னணியில் வட கொரியா மிகவும் வலுவான பங்கை வகிக்கும் என்றும் அவர் கூறினார். ஆனால், கிம் அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்பின் பெயரை நேரடியாகக் குறிப்பிடவில்லை. மேலும், தனது எதிரிகள் "மோதலைத் தேர்ந்தெடுக்கிறார்களா அல்லது அமைதியான சகவாழ்வைத் தேர்ந்தெடுக்கிறார்களா என்பது அவர்களைப் பொறுத்தது, எந்தவொரு தேர்வுக்கும் பதிலளிக்க நாங்கள் தயாராக இருக்கிறோம்" என்றும் கூறினார்

### இந்து சமய அறநிலையத் துறையின்

# சொக்கத்தங்கம் இணை ஆணையர் சிவக்குமார்

## வாயார வாழ்த்தும் பெண் ஊழியர்கள்!..



■ ஆணையர் பி.என்.ஸ்ரீதர்



■ இணை ஆணையர் சிவக்குமார்

மயிலாடுதுறை, மார்ச். 26-

தமிழக இந்து சமய அறநிலையத்துறையின் வரலாற்றில் இப்படியொரு இணை ஆணையரை பார்த்ததும் இல்லை, கேள்விப்பட்டதும் இல்லை என்று மயிலாடுதுறை மண்டலத்தில் உள்ள பெண் ஊழியர்கள் ஆனந்தத்தில் வியக்கின்றனர்.

இந்து சமய அறநிலையத்துறை மயிலாடுதுறை மண்டல இணை ஆணையராக பணியாற்றி வருபவர் சிவக்குமார். இவர் மயிலாடுதுறை மண்டலத்திற்கு பணிக்கு வந்ததிலிருந்து, பல புதிய செயல்களை செய்வதிலும், ஊழியர்களிடம் பழகுவதிலும் இவருக்கு நிகர் இவர்தான். சொல்லப்போனால் பெண் பணியாளர்களுக்கு ரொம்பவே முக்கியத்துவம் கொடுத்து, பாதுகாத்து வருகின்றார் என்றால் அது மிகையாகாது. அதேபோல ஒவ்வொரு கோவிலின் செயல் அலுவலர்கள் ஏதாவது கோப்பில் கையொப்பம் பெறுவதற்கு வந்தாலும் உடனுக்குடன் நிவர்த்தி செய்து அனுப்பி வைப்பதாக கூறுகின்றார்கள்.

கூடுதலாக பெண் ஊழியர்கள் என்றால், தனக்கே உரிய பாணியில் மிகவும் கவனிப்புடன் செய்வதில், இணை ஆணையர் சிவக்குமார் மண்டல அளவில் பரிட்ச்சையமாகி விட்டார்.

இதற்கு உதாரணம் கடந்த 8 ஆம் தேதி உலக மகளிர் தினம் வந்தது. ஆனால் அன்று ஞாயிற்றுக்கிழமை என்பதால், பெண் ஊழியர்களுக்கு சிரமம் வேண்டாம் என்று அன்றைய தினத்தை விட்டுவிட்டு, அடுத்த நாளில் உலக மகளிர் தினம் கொண்டாடலாம் என முடிவு செய்திருந்தார் இணை ஆணையர். ஆனால் தமிழக இந்து சமய அறநிலையத்துறையில் உலக மகளிர் தினம் கொண்டாடுவதற்கு துறை ரீதியான எந்த அறிவிப்போ, உத்தரவோ இல்லை. ஆனால் இணை ஆணையரின் சீரிய முயற்சியில், தமிழ்நாட்டிலேயே இந்து சமய அறநிலையத்துறையில் மயிலாடுதுறை மண்டலத்தில் மட்டும் தான் உலக மகளிர் தினம் கொண்டாடப்பட்டது.

முதல் நாள் மாலையே இணை ஆணையர் சிவக்குமார் அனைத்து கோவில் ஊழியர்களுக்கும் அழைப்பு விடுத்து, வாய்ஸ் மெசேஜ் அனுப்பி இருந்தாராம். அடுத்த நாள் கும்பகோணத்தில் உள்ள நாகேஸ்வரம் திருமண மண்டபத்தில் அனைத்து பெண் ஊழியர்களையும் வரவழைத்து, தனது தலைமையில் உலக மகளிர் தினம் வெகு விமரிசையாக கொண்டாடியுள்ளார்.

இதோடு மட்டுமில்லாமல் அனைத்து பெண் ஊழியர்களுக்கும், அவரவருக்கு தேவையான சிறப்பு விருந்தினையும் அளித்திருக்கிறார். மதிய அறுசுவை உணவு முடிந்த பிறகு, தனது சொந்த செலவில் அனைவருக்கும் திரைப்பட டிக்கெட் எடுத்து கொடுத்து, ஊழியர்களுடனே தானும் அமர்ந்து தாய்க்கிழவி திரைப்படம் பார்த்து அவர்களைக் கௌரவித்துள்ளார்.

இந்து சமய அறநிலையத் துறையில் இணை ஆணையர் என்ற உயரிய பொறுப்பு வகித்து வரும் சிவக்குமார், தனது அந்தஸ்தை கூட ஒரு பொருட்டாக கருதாமல், பெண் ஊழியர்களை அழைத்து உலக மகளிர் தினத்தை கொண்டாடியதுடன், மகளிரை கௌரவித்து அவர்களுடனே தானும் திரைப்படத்திற்கு சென்று வந்தது, தமிழக இந்து சமய அறநிலையத்துறை வரலாற்றில் இதுவே முதல் முறையாகும். அதுமட்டுமல்லாது இணை ஆணையர் சிவகுமாரின் இந்த செயலுக்கு மயிலாடுதுறை மண்டலத்தில் உள்ள பெண் ஊழியர்கள் அனைவரும் ஆனந்தக் கண்ணீர் வடிக்காத குறையாக பாராட்டி வருகிறார்கள்.


இதுபோன்று அனைத்து மண்டலங்களிலும் உள்ள இணை ஆணையர்கள், பெண் ஊழியர்களை கௌரவித்தும், சிறப்பு செய்தும் வரவேண்டும் என தகவல் தெரிந்த மற்ற மண்டலத்தில் உள்ள பெண் ஊழியர்களும் எதிர்பார்க்கிறார்கள்.

பெண் குலத்திற்கு காவல் தெய்வமாக விளங்கி வரும் மயிலாடுதுறை இணை ஆணையர் சிவக்குமார் இருக்கும் வரை பெண் ஊழியர்களுக்கு பாதுகாப்பு மட்டுமில்லாமல் அனைத்து சேவைகளும் முழுமையாக கிடைக்கப் பெற்று வருவதாக கூறுவது கண்கூடு.

எங்களுக்கு சிவக்குமார் சார் இருக்கிற வரைக்கும் எந்த கவலையும் இல்லை, குறையும் இல்லை. எங்க குடும்பத்தில் ஒருவராக இருந்து வரும் ஐயா ஜேசி அவர்களுக்கு எப்படி தான் நன்றி சொல்வது என்றே தெரியவில்லை என்று பெண் ஊழியர்கள் பலரும் வாயார வாழ்த்துகிறார்கள். முன் பிறவியில் நாங்கள் புண்ணியம் செய்திருக்கிறோம். அதனால் தான் சிவக்குமார் ஜேசி ஐயா அவர்களின் கீழ் நாங்கள் வேலை செய்வதற்கு கொடுத்து வைத்திருக்கிறோம்.

மயிலாடுதுறை மண்டலத்தில், உலக மகளிர் தினத்தை கொண்டாடி பெண்மைக்கு பெருமை சேர்த்த இணைய ஆணையர் சிவகுமாரை, இந்து சமய அறநிலையத்துறை கூடுதல் ஆணையர் ஒருவரும் பாராட்டியதாக தகவல்.

இவ்வளவு பெருந்தன்மையாகவும், கனிந்த இதயத்துடனும், மயிலாடுதுறை மண்டலத்தில் இந்து சமய அறநிலையத்துறை பெண் ஊழியர்களை கௌரவித்து வரும் இணை ஆணையர் சிவகுமாரை நாமும் வாழ்த்துவோமாக.



## புகார் கொடுத்தும் 'நோ' ஆக்சன்! ரங்கப்பிள்ளை வீதி சாக்கடை விவகாரத்தில் புதுச்சேரி நகராட்சியின் அலட்சியப்போக்கு

புதுச்சேரி மார்ச் 26-

புதுச்சேரி நகரின் மிக முக்கியமான வணிகப் பகுதியான சண்டே மார்க்கெட் சாலை மற்றும் ரங்கப்பிள்ளை வீதி சந்திப்பு பகுதியில், கடந்த ஒரு வாரமாகச் சாக்கடை நீர் பாதாளச் சாக்கடையிலிருந்து வெளியேறிச் சாலையில் ஆறாக ஓடி வருகிறது. இதனால் அந்தப் பகுதி முழுவதும் கடும் துர்நாற்றம் வீசுவதுடன், தொற்றுநோய் பரவும் அபாயமும் ஏற்பட்டுள்ளது.

*அதிகாரிகளின் அலட்சியம்:* இந்தப் பகுதியில் நாள்தோறும் ஆயிரக்கணக்கான பொதுமக்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகள் வந்து செல்லும் நிலையில், கடந்த ஒரு வாரமாகச் சாக்கடை நீர் தேங்கி நிற்பது குறித்துப் புதுச்சேரி நகராட்சி மற்றும் பொதுப்பணித்துறை (PWD) அதிகாரிகளிடம் பலமுறை புகார் அளித்தும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என அப்பகுதி வியாபாரிகள் மற்றும் பொதுமக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

*சுற்றுலா பாதிப்பு:* புதுச்சேரியின் அடையாளமாகத் திகழும் இந்தப் பகுதியில் நிலவும் இந்தச் சுகாதாரச் சீர்கேடு, மாநிலத்தின் சுற்றுலா நற்பெயரைக் கெடுக்கும் விதமாக உள்ளதாகச் சமூக ஆர்வலர்கள் வேதனை தெரிவிக்கின்றனர். தேர்தல் களம் சூடுபிடித்துள்ள நிலையில், அடிப்படை வசதிகளைக் கூடச் செய்து தராத அதிகாரிகளைக் கண்டித்துப் போராட்டத்தில் ஈடுபடவும் பொதுமக்கள் முடிவு செய்துள்ளனர்.



## பெட்ரோல், டீசலுக்கு தட்டுப்பாடு இல்லை வதந்திகளை நம்ப வேண்டாம்

### பாரத் பெட்ரோலியம்

புதுடெல்லி, மார்ச்.26-

நாட்டின் சில பகுதிகளில் பெட்ரோல், டீசலுக்கு தட்டுப்பாடு நிலவுவதாக பரவும் வதந்திகள் முற்றிலும் ஆதாரமற்றவை என்றும் பொதுமக்கள் பீதியடையத் தேவையில்லை என்றும் பாரத் பெட்ரோலியம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அனைத்து தரப்பு மக்களுக்கும் பாரத் பெட்ரோலியம் வெளியிட்டுள்ள அறிக்கையில், ''சில பகுதிகளில் பெட்ரோல், டீசலுக்கு தட்டுப்பாடு நிலவுவதாக பரவும் வதந்திகள் முற்றிலும் ஆதாரமற்றவை. நாடு முழுவதும் எரிபொருள் தட்டுப்பாடு இல்லை. இந்தியா பெட்ரோல், டீசலை ஏற்றுமதி செய்யும் நாடாகும்.

நம்மிடம் கச்சா எண்ணெய், பெட்ரோல், டீசல், ஏடிஎப் (ATF) ஆகியவை போதுமான அளவில் கையிருப்பில் உள்ளன. விநியோகச் சங்கிலிகள் எந்தவித இடையூறும் இன்றி சீராக இயங்கி வருகின்றன.

பாரத் பெட்ரோலியம் கார்பரேஷன் லிமிடெட் நிறுவனம் முழுமையாகச் செயல்பட்டு வருகிறது. மேலும், தடையற்ற எரிபொருள் விநியோகத்தை உறுதி செய்வதில் உறுதியாக உள்ளது. மக்கள் பீதி அடையவோ, தேவையின்றி கூடுதலாக வாங்கவோ வேண்டாம் என அறிவுறுத்தப்படுகிறார்கள். எரிபொருள் இருப்பு நிலையானதாகவும் போதுமானதாகவும் உள்ளது'' என தெரிவித்துள்ளது.

இந்தியன் ஆயில் கார்பரேஷன் வெளியிட்டுள்ள அறிக்கையில், ''பெட்ரோல், டீசலுக்கு பற்றாக்குறை இல்லை. இணையத்தில் பரவும் வதந்திகள் தேவையற்ற கவலையை ஏற்படுத்தி, இயல்பான விநியோக முறைகளை சீர்குலைக்கக்கூடும். இந்தியன் ஆயில் விற்பனை நிலையங்களில் பொருட்கள் போதுமான அளவு இருப்பு வைக்கப்பட்டு முழுமையாகச் செயல்படுகின்றன.

மக்கள் பீதியுடன் எரிபொருட்களை வாங்குவதைத் தவிர்த்து, சரிபார்க்கப்பட்ட தகவல்களை மட்டுமே நம்புமாறு நாங்கள் கேட்டுக்கொள்கிறோம். நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயல்படுவோம்; வதந்திகளை தவிர்ப்போம்; சீரான சேவைகள் தொடருவதை உறுதி செய்வோம்'' என தெரிவித்துள்ளது. இதேபோன்ற ஒரு அறிவுறுத்தலை இந்துஸ்தான் பெட்ரோலியம் நிறுவனமும் வெளியிட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

## நாகப்பட்டினம் அரசு கல்லூரியில் 100% வாக்களிக்க வலியுறுத்தி மாணவர்கள் விழிப்புணர்வு நிகழ்ச்சி

நாகப்பட்டினம், மார்ச். 26-

100 சதவீதம் வாக்களிப்பதன் அவசியத்தை வலியுறுத்தி நாகப்பட்டினம் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடந்தது. தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் வாக்குப்பதிவு ஏப்ரல் மாதம் 23ம் தேதி நடைபெறவுள்ளது. இதை முன்னிட்டு நாகப்பட்டினம் மாவட்டம் தேர்தலுக்கான முன்னேற்பாடு பணிகளில் முழுவீச்சில் இறங்கியுள்ளது.

இந்நிலையில் சட்டப்பேரவைத் தேர்தலில்



100 சதவீத வாக்குப்பதிவு வலியுறுத்தி தேர்தல் ஆணையம் சார்பில் கல்லூரி மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் இடையே பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றது. இதன் ஒரு பகுதியாக நாகப்பட்டினம் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் தேர்தல் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடந்தது.

மாவட்ட சமூக நல அலுவலர் திவ்யபிரபா தலைமை வகித்தார். நடைபெறவுள்ள சட்டசபை தேர்தலில் 100 சதவீத வாக்குப்பதிவை வலியுறுத்தும் வகையில், மாணவ, மாணவியர் வோட் 100 சதம் என்பதை குறிக்கும் எழுத்துகள் மற்றும் எண்களின் வடிவில் அணிவகுத்து நின்றனர். மேலும் சட்டசபை தேர்தலில் நூறு சதம் வாக்குககள் பதிவாக உதவியாக இருப்பேன் என்று உறுதிமொழியும் ஏற்றுக்கொண்டனர்



■ புதுச்சேரி மாநிலம் மேட்டுப்பாளையம் கனரக வாகனம் முனையத்தில் வழிப்பறி செய்யும் நோக்கத்தோடு, கத்தி மற்றும் இரும்பு பைப்புகள் வைத்திருந்த சாரம் மற்றும் நைனார் மண்டபத்தை சேர்ந்த 5 பேரை வடக்கு குற்றப்பிரிவு மற்றும் தன்வந்திரி நகர் போலீசார் கைது செய்து சிறையில் அடைத்தனர். மேலும் கைது செய்யப்பட்டவர்கள் மீது கொலை முயற்சி, கஞ்சா வழக்குகள் நிலுவையில் உள்ளது.



■ புதுச்சேரி பாஜக மற்றும் தேசிய ஜனநாயக கூட்டணி கட்சி வேட்பாளர்களை ஆதரித்து பிரச்சாரம் செய்வதற்காக, பிரதமர் மோடி வரும் ஏப்ரல் 3 ஆம் தேதி புதுச்சேரியில் வர உள்ளதாகவும், அப்போது அவர் ரோடு ஷோவில் பங்கேற்க உள்ளதாகவும் புதுச்சேரி மாநில பாஜக தலைவர் ராமலிங்கம் தகவல்.



## சங்கரன்கோவில் முதல் ஆலங்குளம் வரை வாக்கு எந்திரங்கள் வைக்கப்படும் 'Strong Room' தயார்

தென்காசி மார்ச். 26-

2026 தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத்தேர்தலை முன்னிட்டு, தென்காசி மாவட்டத்தில் தேர்தல் நடைமுறைகள் இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளன. வாக்குப்பதிவிற்குப் பிந்தைய மிக முக்கியமான நிகழ்வான 'வாக்கு எண்ணிக்கை'க்கான முன்னேற்பாடுகளை மாவட்ட நிர்வாகம் போர்க்கால அடிப்படையில் மேற்கொண்டு வருகிறது.

வாக்கு எண்ணிக்கை மையம்:

தென்காசி மாவட்டம் கொடிக்குறிச்சியில் உள்ள ஸ்ரீராம் நல்லமணி யாதவா கல்லூரி, வாக்கு எண்ணிக்கை மையமாகத் தேர்வு செய்யப்பட்டுள்ளது. சங்கரன்கோவில் (தனி), வாசுதேவநல்லூர் (தனி), கடையநல்லூர், தென்காசி, ஆலங்குளம் தொகுதிகளின் வாக்கு எந்திரங்களும் பாதுகாப்பாக வைக்கப்பட்டு எண்ணப்பட உள்ளன.

*கலெக்டர் மற்றும் எஸ்.பி. நேரடி ஆய்வு:*

மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் . ஏ.கே.கமல்கிஷோர், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஜி.எஸ். மாதவன் முன்னிலையில் கல்லூரியின் உள்கட்டமைப்பு வசதிகளை நேரில் ஆய்வு செய்தார். இந்நிகழ்வின் போது மாவட்ட வருவாய் அலுவலர் சீ.ஜெயச்சந்திரன், பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் அனிட்டா சாந்தி மற்றும் அரசு உயர் அதிகாரிகள் உடனிருந்தனர்.



## நீதி கேட்டுப் போராடும் உறவினர்கள்! புளியங்குடி தனியார் பள்ளி வளாகத்தில் நள்ளிரவில் பரபரப்பு காவல்துறை குவிப்பு

புளியங்குடி மார்ச். 26-

தென்காசி மாவட்டம் புளியங்குடி அருகே தனியார் பள்ளி மாணவி மீது சொகுசு கார் மோதி உயிரிழந்த சம்பவம் பெரும் பதற்றத்தை உருவாக்கியுள்ளது. உயிரிழந்த மாணவியின் உறவினர்கள் உரிய நீதி மற்றும் பேச்சுவார்த்தை கோரி கொல்லம் திருமங்கலம் தேசிய நெடுஞ்சாலையில் உள்ள சிந்தாமணி டோல்கேட் பகுதியில் கடந்த 12 மணி நேரத்திற்கும் மேலாகத் தொடர் சாலை மறியலில் ஈடுபட்டு வருகின்றனர்.

அதிகாரிகள் பேச்சுவார்த்தைக்கு வராததால் ஆத்திரமடைந்த உறவினர்கள், நள்ளிரவில் பள்ளி வளாகத்தை முற்றுகையிட்டனர். அப்போது நடந்த கல்வீச்சில் பள்ளி அருகே உள்ள ஏடிஎம் மையத்தின் கண்ணாடிகள் மற்றும் பள்ளியின் டிஜிட்டல் போர்டுகள் சேதமடைந்தன.

காவல்துறையினர் பேச்சுவார்த்தை நடத்தியும் சமாதானம் அடையாத உறவினர்கள், மீண்டும் நெடுஞ்சாலையில் அமர்ந்து போராடி வருவதால் போக்குவரத்து முற்றிலும் பாதிக்கப்பட்டுள்ளது. அந்தப் பகுதியில் அசம்பாவிதங்களைத் தவிர்க்கக் கூடுதல் போலீசார் குவிக்கப்பட்டுள்ளனர்.



## திருப்பூர் மாவட்டம் தமிழ்நாடு சட்டமன்ற தேர்தல் 2026 பாதுகாப்பு குறித்த ஆலோசனை கூட்டம்

திருப்பூர், மார்ச். 26-

திருப்பூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் வருகின்ற தமிழ்நாடு சட்டமன்ற தேர்தல் 2026 நடைபெறுவதை முன்னிட்டு, திருப்பூர் மாவட்டத்தில் முன்னெச்சரிக்கை மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டி, திருப்பூர் மாவட்ட தேர்தல் மேற்பார்வையாளர் (காவல் துறை) .ராகுல் ஹெக்டே, இ.கா.ப., மற்றும் திருப்பூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஆகியோர் தலைமையில் நடைபெற்றது.

இந்த ஆலோசனை கூட்டத்தில் துணை ராணுவப்படை உயர் அதிகாரிகள் மற்றும் திருப்பூர் மாவட்ட தேர்தல் பிரிவு அதிகாரிகள் கலந்து கொண்டனர். மேலும் திருப்பூர் மாவட்ட தேர்தல் மேற்பார்வையாளர் (காவல் துறை) .ராகுல் ஹெக்டே, இ.கா.ப., அவர்கள் திருப்பூர் மாவட்டத்தின் பதட்டமான வாக்குச்சாவடி பகுதிகளை நேரில் ஆய்வு செய்தார். அப்போது திருப்பூர் மாவட்ட உட்கோட்ட காவல் அதிகாரிகள் மற்றும் காவல் நிலைய பொறுப்பு அதிகாரிகள் உடனிருந்தனர்.



## வாசுதேவநல்லூர் கோட்டையைக் காக்க புளியங்குடியில் திமுக BLA2 முகவர்களுக்கு அசைன்மென்ட்

புளியங்குடிமார்ச் .26-

புளியங்குடியில் திமுக மேற்கு பகுதி நிர்வாகிகள் மற்றும் பாக முகவர்கள் ஆலோசனைக் கூட்டம்

தென்காசி வடக்கு மாவட்டச் செயலாளர் ராஜா ஈஸ்வரன் எம்.எல்.ஏ அவர்களின் அறிவுறுத்தலின்படி, புளியங்குடி மேற்கு பகுதி திமுக சார்பில் வார்டு செயலாளர்கள் மற்றும் பாக முகவர்கள் (BLA2) ஆலோசனைக் கூட்டம், புளியங்குடி காயிதே மில்லத் தெருவில் (ஓடத் தெரு) உள்ள நூருல் இஸ்லாம் வாலிபர் சங்க தனியார் மண்டபத்தில் மேற்கு நகரச் செயலாளர் நாகூர் கனி தலைமை வகித்தனர்.

நிகழ்ச்சிக்கு மேற்குபகுதி நகரஅவை பொறுப்பாளர் அருணாச்சலம் (எ) அப்பாகுட்டி, பொதுக்குழு உறுப்பினர்கள் வேல்சாமிபாண்டியன், பத்திரம் சாகுல் ஹமீது, மாவட்ட மகளிர் அணி துணை அமைப்பாளர் பொன்னுதுரைச்சி, நகராட்சி வழக்கறிஞர் குகன், விவசாய அணி அமைப்பாளர் சேதுராமன், நகர சிறுபான்மை அணி அமைப்பாளர் சேக்மைதீன், ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

2026 தேர்தலை முன்னிட்டு, வாசுதேவநல்லூர் சட்டமன்ற தொகுதியில் திமுக சார்பில் அதிகப்படியான வாக்குகளைச் சேகரிக்க வேண்டும் என்றும், அதற்கான களப்பணிகளை நிர்வாகிகள் தற்போதே தீவிரப்படுத்த வேண்டும் என்றும் ஆலோசனைகள் வழங்கப்பட்டன. வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல், நீக்கல் மற்றும் திருத்தம் போன்ற பணிகளில் பாக முகவர்கள் (BLA2) விழிப்புடன் செயல்பட அறிவுறுத்தப்பட்டது.

இந்த ஆலோசனைக் கூட்டத்தில் புளியங்குடி நகர கழக மேற்கு பகுதி நிர்வாகிகள், வார்டு செயலாளர்கள், பாக முகவர்கள் (BLA2), தகவல் தொழில்நுட்ப அணி முகவர்கள் (BDA), மாவட்ட அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் மற்றும் நகரக் கழக நிர்வாகிகள் என திரளானோர் கலந்து கொண்டனர்.



## சுண்ணாம்பாற்றில் 'சுனாமி' அரண்! அலையாத்திக் காடுகளை உருவாக்கும் கலாம் விதைகளின் விருட்சம் இயக்கம்

புதுச்சேரி மார்ச் 26-

சுற்றுச்சூழலைப் பாதுகாக்கவும், மீன்வளத்தைப் பெருக்கவும் புதுக்குப்பம் சுண்ணாம்பாற்றுப் பகுதியில் 'அலையாத்திக் காடுகள்' உருவாக்கும் பணி நடைபெற்றது. கலாம் விதைகளின் விருட்சம் சமூக இயக்கம் சார்பில் நடைபெற்ற இந்த நிகழ்வை அதன் நிறுவனர் இரா.இராஜா மற்றும் முனைவர் க.ரேகா ஒருங்கிணைத்தனர்.

* முக்கியப் பங்கேற்பாளர்கள்:*

மேனாள் எஸ்பி வீர.பாலகிருட்டிணன், அனிதா பாலகிருட்டிணன், இயற்கைக் காவலர் பா.ச.கீர்த்தி, பொறிஞர்கள் மூர்த்தி, கபிலன், மாணவர்கள் தனுஷ், தனேஷ், இரா.சித்தார்த் மற்றும் இரா.இசை ஆகியோர் கன்றுகளை நட்டனர்.

* ஒத்துழைப்பு: *

இயற்கை ஆர்வலர் மகேஷ்கள உதவிகளையும், சாண்டியூன்ஸ் பேரடைஸ் பீச் நிறுவனம் படகுப் போக்குவரத்து மற்றும் பாதுகாப்பையும் வழங்கியது. மீனவர்கள் மற்றும் மாணவர்கள் திரளாகக் கலந்துகொண்ட இந்த முயற்சி, எதிர்காலப் பேரிடர்களிலிருந்து புதுச்சேரியைக் காக்கும் அரணாக அமையவுள்ளது.



















SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003, Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000